



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்

## கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்

## கணியூர் ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கணியூர் ஊராட்சி மற்றும் கிராமம், க. ச. எண்கள். 544 / 1B , 2A, 2B , 3A1 மற்றும் 546 / 2A1A2 - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு - (1 : 400)

வ

இணையவழி விண்ணப்ப எண்: VD8JL4OC / 2024

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 2.34 ஏக்கர் (அ) 9478.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 45

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

(பொது ஒதுக்கீடு) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :-

i) மனைப்பிரிவு சாலை பரப்பு: 3058.625 ச.மீ

ii) பூங்காவிற்கு தேவையான பரப்பு : மனைப்பிரிவின் மொத்த பரப்பு - (மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%

( 9478.00 - 3058.625) x 10% = 641.94 ச.மீ

அரசாணை எண் :18 ந.நி (ம) கு.வ துறை நாள்: 04.02.2019-ன் படி பூங்கா ஒதுக்கீடு 641.94 ச.மீ பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

iii) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்படவேண்டிய பொது உபயோகம் - I : (மனைப்பிரிவு பரப்பு-மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 0.5%

: (9478.00 - 3058.625 ) x 0.5% = 32.10 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 52.76 ச.மீ = 0.82 %

iv) TANGEDCO - ற்க்கு ஒப்படைக்கப்படவேண்டிய பொது உபயோகம் - I : (மனைப்பிரிவு பரப்பு-மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 0.5%

: (9478.00 - 3058.625 ) x 0.5% = 32.10 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 59.22 ச.மீ = 0.92 %

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ யும் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண் :18 ந.நி (ம) கு.வ துறை நாள்: 04.02.2019-ன் படி சாலை (ம) பொது உபயோகம் உள்ளாட்சிக்கு தானமாகவும், அரசாணை எண் :16 ந.நி (ம) கு.வ துறை நாள்: 31.01.2020 - ன் படி TANGDECO -க்கான பரப்பு TANGDECO (அ) உள்ளாட்சிக்கு தானமாகவும் ஒப்படைப்பு செய்யப்படவேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், கணியூர் ஊராட்சியின் தனி அலுவலர் உறுதி செய்துகொள்ளவேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் **60cm x 120cm** அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
6. அரசாணை எண் :181 வீ.வ (ம) கு.வ துறை நாள்: 09.12.2020-ன் படி உத்தேச மனைப்பிரிவில் தார் சாலை, மழை நீர்வடிகால் வசதி , குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.
7. அரசாணை எண் :141 வீ.வ (ம) கு.வ துறை நாள்: 16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ம. வ / (கோ.உ.தி.கு) எண் : 119 / 2025 (இணையவழி ஒப்புதல்)

திட்ட அனுமதி எண் : 148 / 2025

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (பொ)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
கோயம்புத்தூர் மாவட்டம்

ளர் நிலை-3

கட்டிடக்கலை / திட்ட உதவியாளர்

Signature valid Signature valid

Scanned with OKEN Scanner